தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 219/மா/2022
நாள்: 19 .01.2023

திரு. S. சையது மைதீன்,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை, மேலப்பொன்னகரம், 10வது தெரு, கதவு எண்.24/13ல் வசிக்கும் திரு.S. சையது மைதீன் என்பவரின் 28.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2022–ல் பெறப்பட்டு 219/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, மேலப்பொன்னகரம், 10வது தெரு, கதவு எண்.24/13ல் வசிக்கும் திரு.S. சையது மைதீன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 28.10.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி புதிய வார்டு 1, விளாங்குடி பொற்றாமரை நகர் பகுதியில் மாநகராட்சி மூலம் உரிய கட்டணம் செலுத்த கோரியபடி 50 தெரு விளக்குகள் அமைக்க மின் வாரியம் மூலம் கம்பங்கள் ஊன்றி மின் கம்பிகள் பொருத்தி 4 மாதங்களுக்கு முன் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மாநகராட்சி மூலம் தெரு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. மிக அடிப்படை வசதியான தெரு விளக்கு இல்லாமல் குடியிருப்பவர்களுக்கு தெரு நாய்கள், மாடுகள் மற்றும் விஷ பூச்சிகளால் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநகராட்சிக்கு தெரிவித்தும், மனு முதல்வரின் முகவரிக்கு அனுப்பப்பட்டு அது உரிய துறைக்கு அனுப்பப்பட்டு அதன்படி மனு ஏற்கப்பட்டது என்று 14.07.2022ல் தகவல் அனுப்பப்பட்டும் இன்றைய தேதி வரை தெரு விளக்கு பொருத்தவில்லை. மேலும் மதுரை மாநகராட்சி புதிய வார்டு 1, விளாங்குடி பொற்றாமரை நகர் பகுதிக்கு செல்ல செம்பருத்தி பூங்காவிலிருந்து ஒரு சாலைதான் உள்ளது. இந்த சாலை மண்சாலையாகவும், குண்டும், குழியுமாகவும் மிக மிக மோசமாக உள்ளது. ஆட்டோ, கார், டாக்சி வர மறுக்கும் அளவுக்கு மோசமாக உள்ளது.

மழைபெய்தால் நடந்துகூட போகவே முடியாது. பாதாள சாக்கடை, குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் முடிந்துள்ளது. எனவே விரைவில் சாலை அமைத்து கொடுக்க மாநகராட்சிக்கு தெரிவித்தும், முதல்வரின் முகவரிக்கு அனுப்பப்பட்ட மனு உரிய துறைக்கு அனுப்பப்பட்டு கோரிக்கை ஏற்கப்பட்டது என்று 14.07.2022ல் தகவல் வழங்கப்பட்டும் இதுவரை சாலை போடப்படவில்லை என்றும், மதுரை மாநகராட்சி புதிய வார்டு–1, விளாங்குடி, செம்பருத்தி நகர் பூங்காவிலிருந்து, பொற்றாமரை நகர் செல்லும் பிரதான சாலை மற்றும் பொற்றாமரை நகர் குடியிருப்பு பகுதியில் மாலை 6 மணிக்கு மேல் ஏராளமான வளர்ப்பு மாடுகள் அவிழ்த்து விடப்பட்டு சாலைகளில் பொது மக்களுக்கும், போக்கு வரத்திற்கும் இடைஞ்சலாகவும், அச்சுறுத்தலாகவும் இரவு முழுவதும் திரிகின்றன. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக மாநகராட்சிக்கு தெரிவித்தும் முதல்வரின் உரிய துறை முகவரிக்கு மனு அனுப்பப்பட்டு பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் கோரிக்கை ஏற்கப்பட்டது என்று 25.08.2022ல் தகவல் வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆனால் எவ்வித நடவடிக்கையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதியில் அனைத்து கட்டடங்களும் பல லட்சங்கள் செலுத்தி மனை ஒப்புதல், கட்டிட வரைபட ஒப்புதல் பெற்று சுமார் 100 வீடுகள் கட்டப்பட்டு சொத்து வரியும் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது மனைப்பிரிவுகள் ஒப்புதலுக்கு வசூலிக்கப்படும் தொகைகள் அனைத்தும் அந்தந்த மனை பிரிவுகளில் அடிப்படை பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொற்றாமரை நகர் பகுதியில் சுமார் 200 மனை பிரிவுகளுக்கு பல லட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது. எனவே நிதிபற்றாக்குறை என்ற காரணம் எழ வாய்ப்பில்லை. எனவே மேற்கண்ட கோரிக்கைகளின் பெயரில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மனுதாரர் உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

4) மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், மற்றும் உதவிப்பொறியாளர் இருவரும் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள 50 மின் கம்பங்கள் மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அம்மின் கம்பங்களில் விளக்குகள் அமைக்கும் பணிகளுக்கும், மற்றும் மாநகராட்சியில் உள்ள மின்கம்பங்களின் மின் விளக்குகள் அமைப்பதற்கும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு மின் விளக்குகள் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. மேற்கண்ட பணிகள் இன்னும் 3 மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள இடங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் முடிவடைந்தவுடன் அதாவது 3 மாத காலத்திற்குள் தார்சாலை அங்கு அமைக்கப்படும் என்பதையும், மேலும் கால்நடைகள் மாநகராட்சியின் சாலைகளில் திரிவதை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவ்வாறு திரியும் மாடுகள் மாநகராட்சியில் தொழுவத்தில் விடப்படுகின்றன. எனவே கால்நடைகள் மாநகராட்சியில் திரிவது

கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் எனினும் கால்நடைகள் சாலைகளில் திரிவதை கட்டுப்படுத்தவும், தொடர்ந்து கண்காணித்திடவும் நடவடிக்கைகள் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5) மனுதாரரது புகார் மனு, மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மின்கம்பங்கள் மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அந்த மின்கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை என தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 50 மின்கம்பங்கள் மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அம்மின்கம்பங்களில் விளக்குகள் அமைக்கும் பணிகளுக்கும், மற்றும் மாநகராட்சியில் உள்ள மின்கம்பங்களில் மின் விளக்குகள் அமைப்பதற்கும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் இன்னும் 3 மாத காலத்தில் முடிக்கப்படும் எனவும் மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள இடங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் அப்பணிகள் முடிவடைந்தவுடன் அதாவது 3 மாத காலத்திற்குள் தார் சாலை அங்கு அமைப்பப்படும். மேலும் கால்நடைகள் மாநகராட்சியின் சாலைகளில் திரிவதை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவ்வாறு திரியும் மாடுகள் மாநகராட்சியில் தொழுவத்தில் விடப்படுவதால் கால்நடைகள் சாலைகளில் திரிவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதனை தொடர்ந்து கண்காணித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மாநகராட்சி அலுவலர்கள் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு 3 மாதத்திற்குள் மாநகராட்சி மின்கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்திடவும், கால்நடைகள் சாலைகளில் திரிவதை கட்டுப்படுத்தவும், தார்சாலைகள் அமைத்திடவும் தக்க நடவடிக்கை எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. S. சையது மைதீன்,
ஏண்.24/13, மேலப்பொன்னகரம் 10வது தெரு,
மதுரை – 625 016.

2)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக